# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tnerc.gov.in

**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 22 /2018**

அஞ்சலை / மாலா,
63A, சாலை நகர்,
பிரிக்லின் ரோடு,
புரசைவாக்கம், சென்னை–600 007 . . . மேல்முறையீட்டாளர்
(திருமதி.அஞ்சலை)

எதிர்

1) உதவி பொறியாளர்/கீழ்பாக்கம்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
37, மேவாக்கம் டேங்க் ரோடு, கீழ்ப்பாக்கம்,
சென்னை – 600 010

2) உதவி பொறியாளர்/கீழ்பாக்கம்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
37, மேவாக்கம் டேங்க் ரோடு, கீழ்ப்பாக்கம்,
சென்னை – 600 010

3) செயற் பொறியாளர்/எழும்பூர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
47, குக்ஸ் ரோடு, ஓட்டேரி,
சென்னை–12. . . . எதிர்மனுதாரர்கள்

(1.திரு.K. கணபதி, செயற்பொறியாளர்/எழும்பூர்
2. திரு. K. ராஜசேகரன், உதவி செயற்பொறியாளர் கீழ்ப்பாக்கம் மற்றும் 3.திரு. N. ராஜேஷ்கண்ணா, உதவி பொறியாளர்/கீழ்பாக்கம்)

**கேட்புரை நாள் : 19–7–2018**

**ஆணை நாள் : 10.11.2018**

அஞ்சலை / மாலா, 63A, சாலை நகர், பிரிக்லின் ரோடு, புரசைவாக்கம், சென்னை–600 007 அவர்களின் 9.5.2018 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.22/2018 ஆக பதிவு

செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 19.7.2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதஙகள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதஙகள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதஙகள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழஙகப்படுகிறது.

**ஆணை**

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :**

மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண்.146–011–217–ல் அதிக மின் கட்டணம் வசூல் செய்ததை திரும்ப அளிக்குமாறு முறையீட்டுள்ளார்.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளரின் வீட்டு மின் இணைப்பு எண்.146–011–217–ல் மின் பயனீட்டளவு 14.10.2016 அன்று எடுத்தார்கள். அதன் பிறகு ஒரு வருடம் கழித்து 14.9.2017–ல் மின் பயனீட்டளவை கணக்கீடு செய்தார்கள். இடைப்பட்ட காலஙகளில் மேல்முறையீட்டாளர் மின் ஊழியர்களை பலமுறை அழைத்து மின் பயனீட்டளவு எடுக்கச் சொல்லியும் பயனீட்டளவு 100 யூனிட்டுக்கு மேல் ஓடுவது இல்லையென்று சொல்லி மின்பயனீட்டளவை எடுக்க வரவில்லை. ஒரு வருடத்திற்கு மொத்தமாக ரூ.2480/–ம் மேலும் 13.10.2017–ல் மின் பயனீட்டளவு கணக்கீடு செய்துள்ளபடி ரூ.8577/–ம் மேல்முறையீட்டாளர் 20.12.2017 அன்று பணம் செலுத்தியுள்ளார்.

2.2 இரண்டு மாதத்திற்கொருமுறை முறையாக மின் பயனீட்டளவு கணக்கீடு செய்யாமல் ஒரு வருடம் கழித்து கணக்கீடு செய்ததால் பயனீட்டளவுக்கு அதிகமாக பணம் செலுத்தியுள்ளதால் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திடம் 22.12.2017 அன்று மேல்முறையீட்டாளர் மனு சமர்ப்பித்துள்ளார். மன்றம் 11.4.2018 அன்று தனது ஆணையை பிறப்பித்துள்ளது.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழஙகிய ஆணையில் அதிருப்தியுற்ற மனுதாரர் மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

**3. மன்றத்தின் தீர்வு**

3.1 சென்னை மின்பகிர்மான வட்டம்/மையத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 8.5.2018 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. மன்றம் வழஙகிய ஆணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>Findings & Orders</u>*

*The Complainant had not turned up for hearing. Since, the complainants request for entry of Bimonthly readings in white meter card is being done regularly (should be continued regularly without lapse) this forum is of the opinion to close the petition.*

*However the licensee's are advised to monitor the duty of assessement staff on regular intervals so as to avoid these type of complaints in near future.*

*No further direction is required in this regard."*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

**4.1** மேல்முறையீட்டாளர் அவருடைய வீட்டு மின்இணைப்பு எண்.**146–011–217**ல் மின் கட்டணம் அளவு **14.10.2016** அன்று எடுத்தார்கள். அதன் பிறகு ஒரு வருடம் கழித்து **12.10.2017** ல் வந்து கணக்கீடு செய்தார்கள். நாஙகள் எத்தனையோ முறை அவரை அழைத்து அளவு எடுக்க சொன்னால் உஙகள் வீட்டில் **100** யூனிட்டுக்கு மேல் ஓடுவது இல்லை என்று சொல்லி விட்டு தற்போது திடீர் என்று வந்து அளவு எடுத்துவிட்டு **14.9.2017** தேதி வரையில் மொத்தமாக ரூ.**2480/–** மற்றும் ரூ.**510/-** என ஒரே தேதியில் இரண்டு பில் பதிய வேண்டும் என்பது புரியவில்லை. மீண்டும் **20.12.2017** தேதியில் ரூபாய் ரூ.**8577/–** வசூல் செய்கிறார்கள். அதன் பிறகு **18.1.2018** இல் ரூ.**1912/–** என்று கார்டில் எழுதிவிட்டு அதை குறிப்பிட்ட நாட்களில் என்னிடம் வசூல் செய்யாமல் நாட்கள் கடத்தி நீஙகள் கொடுத்த புகார் மனுவை வாபஸ் செய்யவேண்டும். அப்பொழுதுதான் இந்த பணத்தை வாஙகுவோம் என்று சொல்லி அலைகழித்தார்கள். நாட்கள் சென்ற பிறகு அபராத தொகை போட்டு வசூல் செய்கிறார்கள்.

**4.2** தற்பாது **1912/–**க்கு பதிலாக ரூ.**2001/–** பில் கொடுக்கிறார்கள். மீண்டும் தற்போது **23.2.2018** அன்று ரூ.**980/–** கட்டியுள்ளேன். இதில் எப்பொழுது அரசாஙகம் சொல்லிய **100** யூனிட்டுகள் இலவசம் என்பதை கழித்து பில் போடுகிறார்கள் என்பது புரியவில்லை. அரசு வழஙகும் மானியம் எஙகே இருக்கிறது. எஙகள் வீட்டில் வந்து என்னென்ன பொருட்கள் உள்ளன என்பதை சோதிக்க சொல்லியும் அழைத்தோம். அதற்கெல்லாம் நேரம் இல்லை என்கிறார்கள். இவர்களுக்கு நேரம் இல்லை என்பதற்கு நாஙகள் ஏன் நட்டம் அடையவேண்டும்.

**4.3** இதற்கு முதற்காரணம் கணக்கீட்டாளர், **2.** AE, **3.** AD, **4.** DE நாஙகள் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு பதில் தொலைப்பேசியிலும் நேரிலும் வந்து மிரட்டும்

தொனியில் பேசுகிறார்கள். இவர்கள் மின் வாரியத்தின் அதிகாரிகள் போல் எங்களிடம் நடந்து கொள்ளவில்லை. இவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நாங்கள் பதில் சொன்னால் எங்களையே எதிர்த்து பேசுகிறீர்களா பள்ளம் போட்டு மின்சாரத்தை துண்டித்து விடுவோம் என்று மிரட்டுகிறார்கள்.

**4.4** இவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் எங்களிடம் அதிக மின் கட்டணம் வசூல் செய்ததை மீண்டும் எங்களிடம் திருப்பி கொடுக்கவும் வேண்டும். நான் **10** ரூபாய் வட்டிக்கு வாங்கித்தான் மின்சார பில் கட்டியுள்ளேன். அவர்கள் சொன்ன தொகையும் மற்றும் அபராத தொகையும் கட்டியுள்ளேன். இதற்கு எனக்கு தகுந்த நீதி வழங்க அய்யா அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் மிகவும் தாழ்மையுடன் வணங்கி கேட்டுக் கொள்கிறேன்.

**5.** **<u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>**

**5.1** சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம் எழும்பூர் கோட்டம், கீழ்பாக்கம் உபகோட்டம், கீழ்ப்பாக்கம் பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட தாழ்வழுத்த மின் இணைப்பு எண்.**146–011–217**–ல் **14.10.2016** அன்று மின் கணக்கீடு செய்யப்பட்டு ரூ.**560/–** மின் கட்டணம் செலுத்தப்படவேண்டிய நிலையில், மனுதாரர் மின்கட்டணம் செலுத்தாததால், மின்கட்டணம் செலுத்தாதோர் பட்டியலில் (defaulters list) இம்மின் இணைப்பு எண் இடம் பெற்றது. **25.11.2016** மின் கட்டணம் ரூ.**560/–** தாமதக்கட்டணம் ரூ.**8/–** மறு இணைப்பு கட்டணம் ரூ.**60/–** ஆக மொத்தம் **628/–** CHC146AR2S1110 என்ற ரசீது எண்ணின்படி மனுதாரரால் செலுத்தப்பட்டது. இந்நிலையில் **26.11.2016** அன்று திரு. ஆ. நமச்சிவாயம் அப்போதைய மின்கணக்கீட்டாளர் (தற்போது உயிருடன் இல்லை) அவர்களால் மேற்படி மின்இணைப்பு எண் மின் துண்டிப்பு (DC) என்று தவறுதலாக கணினியில் பதியப்பட்டது தெரியவருகிறது.

**5.2** கடந்த **14.9.2017** அன்று கணினியில் மறு இணைப்பு தரப்பட்டு மின் கட்டணம் ரூ.**343**, மறு இணைப்பு கட்டணம் ரூ.**60**, தாமத கட்டணம், சோதனை கட்டணம் ரூ.**75/–** ஆக மொத்தம் ரூ.**519/–** CHC146AR21S1732 என்ற ரசீதின் படி வசூலிக்கப்பட்டது. அதே நாளில் CHC146AR21S1735 என்ற ரசீதின் படி ரூ.**2480/–** முன் பண மின்கட்டணமாக (advance CC charge) மனுதாரர் செலுத்தினார். பிறகு **13.10.2017** அன்று மாதாந்திர மின் அளவீடு செய்யப்பட்டது. அதில் **1751** யூனிட்டுகளுக்கு ரூ.**10797/–** மின் கட்டணம் செலுத்த வேண்டிய நிலையில் ஏற்கெனவே செலுத்தப்பட்ட முன் பணத்தொகை ரூ.**2480/–** கழிக்கப்பட்டு மீதி ரு.**8317/–** செலுத்த வேண்டிய

நிலையில் CHC149A1S651 என்ற ரசீது மூலம் தாமத கட்டணம் ரூ.200, மறு இணைப்பு கட்டணம் ரூ.60, ஆக மொத்தம் ரூ.8577/– மனுதாரரால் செலுத்தப்பட்டது. பிறகு 12.12.2017 அன்று டிசம்பர் 2017 மாதத்திற்கான மின்கணக்கீடு செய்யப்பட்டு 520 யூனிட்டுகளுக்கு ரூ.1912/– செலுத்த வேண்டிய நிலையில் CHC146ARS362 என்ற ரசீதின்படி தாமத கட்டணம் ரூ.29, மறு இணைப்பு கட்டணம் ரூ.60 ஆக மொத்தம் ரூ.2001/– ஐ 18.1.2018 அன்று மதுாரர் செலுத்தியுள்ளார். மேலும், 9.2.2018 அன்று பிப்ரவரி 2018 மாதத்திற்கான மின் கணக்கீடு செய்யப்பட்டு 450 யூனிட்டுகளுக்கு ரூ.980/–ஐ CHC149A1S752 என்ற ரசீது எண்ணின்படி 23.2.2018 அன்று செலுத்தியுள்ளார்.

5.3 அக்டோபர் 2017க்கு பிறகு வரும் ஒவ்வொரு மின்கணக்கீடும் தவறாமல் வெள்ளை வண்ண அட்டையில் குறித்துக் கொடுக்கப்படுகிறது. மேலும், மின் கணக்கீடு பற்றிய விவரஙகளை குறுஞ்செய்தி மூலம் அறியும் பொருட்டு மனுதாரரின் கைப்பேசி எண்ணும் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5.4 இதே கோரிக்கைக்காக மனுதாரர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்/சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம் என்ற மன்றத்தில் முறையீடு செய்திருந்தார். 11.4.2018 அன்று குறைதீர்க்கும் மையத்தால் நடத்தப்பட்ட விசாரணையில் மனுதாரர் கலந்து கொள்ளவில்லை. எனினும் மாதாந்திர மின் கட்டணத்தை தவறாமல் வெள்ளை அட்டையில் பதிவு செய்து தருமாறு குறைதீர்க்கும் மையம் ஆணையிட்டது. அதன்படியே மின் கணக்கீட்டு விவரஙகள் தவறாமல் வெள்ளை அட்டையில் பதிவு செய்யப்படுகிறது.

5.5 மேலும், அரசு மானியம் கழிக்கப்பட்டு பிறகுதான், தான் உபயோகித்த மின்சாரத்திற்குண்டான மின்கட்டணஙகளை மனுதாரர் செலுத்தியுள்ளார். ஆதலால் செலுத்தப்பட்ட முறையான மினகட்டணஙகளை திரும்பவும் கோருவது ஏற்புடையதல்ல என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை :</u>

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தஙகளது தரப்பு வாதஙகளை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 19.7.2018 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திருமதி. மாலா அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதஙகளை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. K. கணபதி, செயற்பொறியாளர்/எழும்பூர், திரு. K. ராஜசேகரன், உதவி செயற்பொறியாளர்/கீழ்ப்பாக்கம் மற்றும் திரு. N. ராஜேஷ்கண்ணா, உதவி பொறியாளர்/கீழ்பாக்கம் ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

7. <u>கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 14.10.2016 அன்று மின் பயனீட்டளவு கணக்கீடு செய்யப்பட்ட பிறகு ஒரு வருடம் கழித்து 14.9.2017 அன்றுதான் மின் பயனீட்டளவு கணக்கீடு செய்யப்பட்டது என்றும் எதிர்மனுதாரர் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை முறையாக கணக்கீடு செய்திருந்தால் ரூபாய்.10,797/– மின் கட்டணமாக செலுத்தவேண்டிய தேவையிருந்திருக்காது என்றும் தெரிவித்தார். மேலும், முறையாக மின் பயனீட்டளவு கணக்கீடு செய்யாதது எதிர்மனுதாரரின் தவறென்றும் அதனால் மேல்முறையீட்டாளர் தண்டனைக்குள்ளாக்கப்படுவது சரியல்ல என்றும் வாதிட்டார்.

7.3 வீட்டு வேலை செய்து பிழைப்பு நடத்தும் மேல்முறையீட்டாளருக்கு இவ்வளவு பெரிய தொகை தனது வாழ்வாதாரத்தை பாதிக்கும் என வாதிட்டார். ஆகையால் அதிக மின் கட்டணம் வசூல் செய்ததை திருப்பிக் கொடுக்க வேண்டுமென முறையிட்டார்.

8. <u>கேட்புரை நாளில் எதிர்மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார். மேலும் கேட்புரை நாளில் கீழ்க்கண்ட வாதங்களை எடுத்துரைத்தார்.

8.2 மேல்முறையீட்டாளரின் வீட்டு மின்இணைப்பு எண்.146–011–217–ல் 14.10.2016 அன்று மின் கணக்கீடு செய்யப்பட்டு மின் கட்டணம் செலுத்தாததால் மேற்படி மின்இணைப்பு துண்டிப்பு செய்தபின் மறு மின்இணைப்புக் கட்டணத்தோடு 25.11.2016 அன்று மேல்முறையீட்டாளரால் செலுத்தப்பட்டது. ஆனால், 26.11.2016 அன்று மேற்படி மின்இணைப்பு துண்டிப்பு என்று தவறுதலாக கணினியில் பதியப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

8.3 14.9.2017 அன்று கணினியில் மறு மின்இணைப்பு கொடுக்கப்பட்டு மறு மின் இணைப்பு கட்டணத்தோடு மின் கட்டணம் ரூ.519/– வசூலிக்கப்பட்டதாகவும் பிறகு 13.10.2017–ல் மாதாந்திர மின் அளவீடு செய்து 1751 யூனிட்டுகளுக்கு ரூ.10,797/– மின்கட்டணம் செலுத்த அறிவுறுத்தப்பட்டதாகவும் அதன்பிறகு தொடர்ந்து முறையாக இருமாதத்திற்கு ஒருமுறை கணக்கீடு செய்யப்பட்டு வெள்ளை அட்டையில் (white meter card) பதிவு செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

8.4 அரசு மானியம் கழிக்கப்பட்ட பிறகு தான் உபயோகித்த மின்சாரத்திற்கான மின்கட்டணஙகளைத்தான் மேல்முறையீட்டாளர் செலுத்தியுள்ளார். ஆகையால் செலுத்தப்பட்ட முறையான மின் கட்டணஙகளை திரும்ப கோருவது ஏற்புடையதல்ல என எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் வாதஙகளையும் கருத்தில் கொண்டு கீழ்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

9.2 மேல்முறையீட்டாளர் 14.10.2016க்குப் பிறகு 14.9.2017ல் மின் பயனீட்டளவு கணக்கீடு செய்யப்பட்டதால் இரு மாதத்திற்கு ஒருமுறை ஆகும் பயனீட்டளவை விட மிக அதிகமாக மின்கட்டணம் செலுத்தப்பட்டதாக தெரிவித்து அதிகப்படியாக வசூல் செய்யப்பட்டதை திருப்பிக் கொடுக்க வேண்டியுள்ளார்.

9.3 மேல்முறையீட்டாளர் இரு மாதத்திற்கு ஒருமுறை எதிர்மனுதாரர்களின் பணியாளர்களால் மின் கணக்கீடு செய்யவில்லை என்று தெரிவித்து இருப்பதால், இது சம்பந்தமாக அறிந்துகொள்ள தமிழ்நாடு மின்வழஙகல் விதி 8 ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***8. Meter Reading, Billing and intervals***

*(1) In the case of Low Tension service connections, the Licensee with the approval of the Commission shall decide the periodicity of meter readings, collection dates, modes etc. However, in the case of temporary supply, the meter reading shall be taken at the end of the period in case sanction is for less than a month and once in a month in case sanction is for a period more than a month. The Licensee shall have access to the consumer's premises at all reasonable hours for the purpose of such reading as per the provisions contained in section 163 of the Act. The format of the meter cards containing all basic information to be made available to*

*the consumer shall be got approved by the Commission. It is the responsibility of the Licensee to ensure that the details in the respective meter cards are entered without omission.*

*(2)In the case of High Tension Service Connections, the Licensee shall, within four days after the expiry of each billing month, cause to be delivered to every consumer a bill of charges stating the amount payable by the consumer in connection with supply of electricity by the Licensee.*

*(3) deleted*

*(4) In case of LT services the meter readings of last digit up to and inclusive of five units shall be rounded off to the lower multiple of ten units and the meter readings of last digit from six to nine units shall be rounded off to the higher multiple of ten units.*

*(5) In case of LT services, after taking the meter readings, the particulars of meter readings, energy consumption and charges payable will be incorporated in the consumer meter card.*

*(6) Payment for energy supplied shall be made by the consumer according to the meter readings referred to above and on delivery of a bill therefor in the case of High Tension consumers and incorporation of current consumption charges in the consumer meter card or assessment slip in the case of Low Tension consumers.*

*(7)The total of current consumption charges and other miscellaneous charges etc. in a bill/ assessment shall be rounded off to the nearest rupee.*

9.4 மேற்கண்ட விதி 8(1)ன்படி நாம் அறிவது

1) தாழ்வழுத்த மின்னிணைப்புகளை பொறுத்தவரை, உரிமம்தாரர், ஆணையத்தின் ஒப்புதலுடன், மின் பயனீட்டுக் கணக்கீட்டின் காலமுறை அறிக்கை, வசூலிப்பு நாட்கள், முறைகள் குறித்து முடிவு செய்தல் வேண்டும் எனவும், மேலும் உரிமம்தாரர், சட்டத்தின் 163–ம் பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளின்படி அத்தகைய மின்பயனீட்டுக் கணக்கீடு செய்வதன் பொருட்டு நியாமான நேரங்களில் நுகர்வோரின் வளாகத்திற்குள் நுழைவதற்கு உரிமையுடையவராவார் என்றும் அறியப்படுகிறது.

2) மேலும், நுகர்வோருக்கு கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டிய அனைத்து அடிப்படை தகவலும் அடங்கிய மின் அட்டைகளின் வடிவமானது, ஆணையத்தினால் ஒப்புதலளிக்கப்படவேண்டும் எனவும், அந்தந்த மின் அட்டைகளிலுள்ள விவரங்கள் விடுகையில்லாமல் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்வது உரிமம்தாரரின் பொறுப்பாகும் என்றும் அறியமுடிகிறது.

3) விதி 8(5)ன்படி பயனீட்டாளரின் மின் அட்டையில் மின்னளவியின் பதிவு, பயனீட்டளவு மற்றும் செலுத்த வேண்டிய தொகை குறித்து பதிவுசெய்யப்பட வேண்டும் என்று அறியமுடிகிறது. மேலும் விதி 8(6)ன்படி பயனீட்டாளரின் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே மின்பயனீட்டிற்கு தொகை செலுத்தப்படவேண்டும் என்றும் அறியமுடிகிறது.

9.5 பத்தி 9.4—ல் உள்ள தீர்வுகளின்படி உரிமதாரர் தற்பொழுது அனுமதிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளின்படி 50 KW திறனுக்கு கீழுள்ள தாழ்வழுத்த மின்னிணைப்புகளை பொறுத்தவரை இரண்டு மாதத்திற்கு ஒருமுறை மின்பயனீட்டளவை கணக்கீடு செய்யவேண்டும். அவ்வாறு மின் அட்டைகளிலுள்ள விவரஙகள் விடுகையில்லாமல் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்வது உரிமம்தாரரின் பொறுப்பாகும்.

9.6 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பில் மின்பயனீட்டளவு 14.10.2016 அன்று எடுக்கப்பட்டு மேல்முறையீட்டாளரும் அதற்குண்டான தொகையை 25.11.2016 அன்று செலுத்தியுள்ளார். ஆனால் கணினியில் உள்ள பதவின்படி 26.11.2016 அன்று மின்னிணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரரும் 25.11.2016 அன்று மேல்முறையீட்டாளரால் மின்கட்டணம் செலுத்திய பிறகு 26.11.2016 அன்று மேற்படி மின்இணைப்பு துண்டிப்பு என்று தவறுதலாக கணினியில் பதியப்பட்டுள்ளதாக ஒப்புக் கொண்டுள்ளார்.

9.7 26.11.2016 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டதாக கணினியில் பதிவு உள்ள நிலையில் எதிர்மனுதாரர் அதன்பிறகு ஒரு வருடகாலம் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பில் மின்பயனீட்டளவை பதிவு செய்யாமால் இருந்துள்ளார். அதன்பிறகு 14.09.2017 அன்று மறு இணைப்பு செய்யப்பட்டதாக அறியமுடிகிறது. கணினியில் உள்ள பதிவு விவரஙகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| மாதம் | மின்னளவு எடுத்த தேதி | KWH மின் அளவு(FR) | பயனீட்டு அளவு | செலுத்தப்பட்ட தொகை | செலுத்திய தேதி |
|---|---|---|---|---|---|
| 10/2016 | 14.10.2016 | 14760 | 310 | 560 | 25.11.2016 |
| 11/2016 | 26.11.2016 | 14939 | மின்துண்டிப்பு | | |
| 9/2017 | 14.09.2017 | 14939 | மறு இணைப்பு | 519 | 14.09.2017 |
| 10/2017 | 13.10.2017 | 16690 | 1751 | 8317 | 20.12.2017 |

மேலேயுள்ள தகவல்களின்படி 14.09.2017 அன்று மறு இணைப்பு செய்யும்பொழுது 14.10.2016 அன்றுள்ள மின்னளவீட்டிற்கும் மின்துண்டிப்பு செய்யப்பட்ட போது இருந்த மின்னளவீட்டிற்கும் உள்ள வித்தியாசத்தொகையே மேல்முறையீட்டாளரிடம் பெறப்பட்டுள்ளது. அதன்பிறகு 13.10.2017 அன்று மின்னளவியில் மின்பயனீட்டளவு கணக்கீடு செய்யும்பொழுதுதான் மின்னளவியின்(FR) பதிவு 16690 என்றும் பயனீட்டளவு 1751 யூனிட்கள் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பில் ஒரு வருடமாக மின்கணக்கீடு செய்யாமல்

மொத்தமாக ஒரு வருட பயன்பாட்டையும் சேர்த்து 1751 யூனிட்கள் என்று 13.10.2017 அன்று பதிவிட்டுள்ளதாக கருத வேண்டியுள்ளது.

9.8 மேலும், தவறுதலாக கணினியில் பதியப்பட்டிருந்தாலும் ஒரு வருட காலமாக மேற்படி மின் இணைப்பு எதிர்மனுதாரரால் ஆய்வு செய்யப்படவில்லை என்றும் தெரிகிறது. ஆகையால் எதிர்மனுதாரரின் தவறாலும் கவனக்குறைவாலும் ஏற்பட்டுள்ள அதிகப்படியான மின்கட்டணத்தை மேல்முறையீட்டாளரிடம் வசூல் செய்தது சரியல்ல என்று நான் கருதுகிறேன். எனவே, இரு மாதங்களுக்கு ஒருமுறை முறையாக மின் பயனீட்டளவு கணக்கீடு செய்யப்பட்டிருந்தால் வரக்கூடிய மின் கட்டணத்தை மட்டுமே மேல்முறையீட்டாளர் செலுத்துவற்கு கடமைப்பட்டவர் ஆவார்.

9.9 மேலேயுள்ள பத்திகளிலுள்ள தீர்வுகளின் அடிப்படையில் 14.10.2016–க்கு பிறகு 13.10.2017–ல் எடுக்கப்பட்ட மொத்த மின் பயனீட்டளவை சமமாக 6 இரு மாதங்களுக்கு (6 bi-monthly) பிரித்து கணக்கீடு செய்து வரும் மின்கட்டணத் தொகை போக மீதியுள்ள தொகையை மேல்முறையீட்டாளருக்கு எதிர்மனுதாரர் திருப்பித்தரவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது. அவ்வாறு கணக்கீடு செய்து திரும்ப வழங்க வேண்டிய தொகையை மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் வரவு வைத்து வருங்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய மின்கட்டணத்தில் சரிசெய்துகொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

## 10. <u>கவனிப்பாய்வு</u>

எதிர்மனுதாரர், உரிமதாரர் அறிவுறுத்தியுள்ளபடி குறிப்பிட்ட இடைவெளியில் முறையாக மின் இணைப்புகளை மின் துண்டிப்பு (Physical Disconnection), மீட்டர் பழுது, மிக அதிகமான/குறைவான மின் பயனீட்டளவு போன்ற நிகழ்வுகளை ஆய்வு செய்திருந்தால் இதுபோன்ற மின் நுகர்வோர் குறைபாடுகள் ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம்.

## 11. <u>முடிவுரை</u>

11.1 பத்தி எண்.9–ல் உள்ள கூறியுள்ளபடி அதிகப்படியாக வசூல் செய்த மின்கட்டணத்தை மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் வரவு வைத்து வருங்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய மின்கட்டணத்தில் சரிசெய்துகொள்ளுமாறு தீர்வு செய்யப்படுகிறது.

**11.2** மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை எதிர்மனுதாரர் இந்த தீர்வு கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவு இடப்படுகிறது.

**11.3** மேற்கண்டி முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண். 22/2018 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) அஞ்சலை / மாலா,
63A, சாலை நகர்,
பிக்லின் ரோடு,
புரசைவாக்கம், சென்னை–600 007

2) உதவி பொறியாளர்/கீழ்பாக்கம்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
37, மேவாக்கம் டேங்க் ரோடு, கீழ்ப்பாக்கம்,
சென்னை – 600 010

3) உதவி பொறியாளர்/கீழ்பாக்கம்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
37, மேவாக்கம் டேங்க் ரோடு, கீழ்ப்பாக்கம்,
சென்னை – 600 010.

4) செயற் பொறியாளர்/எழும்பூர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
47, குக்ஸ் ரோட, ஓட்டேரி,
சென்னை–12.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.